பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 10 2024 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. கடந்த பத்தாண்டுகளில் ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு, பயணியர் வசதி மற்றும் பாதுகாப்பு பன்மடங்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

2. வடகிழக்கு பருவமழை வெள்ள பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்க 300 வீரர்கள் கொண்ட 10 குழுக்கள் தயார்நிலையில் இருப்பதாக அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் மீட்பு மையம் தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. தோஹாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளிப்பதக்கதங்களை வென்றது.

>>>><<<<

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சௌராஷ்டிர மக்கள் சிறப்பாக செயலாற்றி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

மதுரை, சௌராஷ்ட்ர வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த தொழில் முனைவோர் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 40 செகண்ட்ஸ்)

கடந்த பத்தாண்டுகளில் ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு, பயணியர் வசதி மற்றும் பாதுகாப்பு பன்மடங்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மதுரை, வண்டியூரில் நடைபெற்ற பிஜேபி உறுப்பினர் சேர்க்கை முகாமில் கலந்து கொண்ட அமைச்சர், ஜனநாயக முறைப்படி உறுப்பினர்களை சேர்க்கும் பணியை பிஜேபி மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழகத்தில், ஆளும் திமுக அரசு வரிகளை உயர்த்தி, அரசு சேவைகளுக்கான கட்டணங்களையும் பலமடங்கு உயர்த்தியுள்ளதாகவும் திரு. எல். முருகன் குற்றம் சாட்டினார்.

>>>><<<<

வடகிழக்கு பருவமழை, வெள்ள பாதிப்புகளிலிருந்து பொதுமக்களை மீட்க 300 வீரர்களை கொண்ட 10 குழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் மீட்புப் படை மையம் தெரிவித்துள்ளது.

இந்த மையத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்துடன் நேரடி தொடர்பில் தேசிய பேரிடர் மீட்புப் படை மையம் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் வளாகங்களில் செயல்பட்டு வரும் பேரிடர் அவசர கட்டுப்பாட்டு மையத்துடனும் தொடர்பில் இருப்பதாகவும் இன்று வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு, மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் உடனடியாக கவனம் செலுத்தி சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளை ஆய்வு செய்த அவர், ரத்த வங்கி, அறுவை சிகிச்சை அரங்கம், எலும்பு முறிவு சிகிச்சை, சிடி ஸ்கேன் உள்ளிட்ட வசதிகளும் இந்த மருத்துவமனைகளில் செய்து தரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருவோருக்கும், அவர்களை கவனித்துக் கொள்ளும் உறவினர்களுக்கும் தேவையான வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

>>>><<<<

கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், சர்க்கலை ஆலைகளின் வளர்ச்சிக்காகவும் தமிழக அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூரில் செயல்பட்டு வரும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஆய்வு மேற்கொண்ட அவர், ஆலையின் கரும்பு பிழி திறன், கரும்பு கொள்முதல் மற்றும் விவசாயிகளுக்கு ஆலை வழங்கும் தொகை, இணை மின்உற்பத்தி ஆகியவை குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கடந்த 3 ஆண்டுகளில் 694 கோடியே 37 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு 775 கோடி ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு, கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

>>>><<<<

தமிழகத்தில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில், தஞ்சை, திருவாரூர், மதுரை, தேனி, விருதுநகர் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் 60 செகண்ட்ஸ்)

தமிழக கடலோர பகுதிகளில் சூறைக்காற்று வீசுவதால், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதாகவும் திரு. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

>>>><<<<

நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் கனமழையினால் 9 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

உப்பள பாத்திகளில் கடல்நீர் தேங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 40 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

தென்காசி மாவட்டத்தில் தமிழக அரசின் குறைந்த வட்டியிலான கடனுதவி திட்டத்தின் கீழ், குறு நிறுவனங்கள் 20 லட்சம் ரூபாய் வரை கடன் பெற விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திரு. கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

நீலகிரி மாவட்டத்தில் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், மழை வெள்ளத்தில் சிக்குபவர்களை எவ்வாறு மீட்பது குறித்து தீயணைப்புத் துறையினர் சார்பில் இன்று உதகை படகு இல்லத்தில் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

>>>><<<<

நாமக்கல் மாவட்டத்தில் இளம் சாதனையாளர்களுக்கான பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், பயன்பெற விரும்பும் மாணவர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் வரும் 15ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி. உமா தெரிவித்துள்ளார்.

>>>><<<<

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒகேனக்கல் அருவிகளில் குளிக்கவும், பரிசல் பயணம் மேற்கொள்வதற்கும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லங்கள், போதைப்பொருள் மறுவாழ்வு இல்லங்கள் போன்றவை உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>><<<<

திருவள்ளூர் மாவட்டம், கவரப்பேட்டை அருகே, ரயில் பாதை சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதை அடுத்து கும்மிடிப்பூண்டி – சென்னை சென்ட்ரல் மார்க்கத்தில் மின்சார ரயில் சேவை தொடங்கியுள்ளது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

தோஹாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஐந்து வெள்ளிப்பதக்கதங்களை வென்றது.

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இரட்டையர் பிரிவில் **Sarth Mishra – Ankur Bhattacharjee** இணை தங்கப்பதக்கத்தையும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ankur** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் **Divyanshi-**யும், இரட்டையர் பிரிவில் **Divyanshi - Syndrela** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இரட்டையர் பிரிவில் **Rupam - Sahil** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Syndrela - Soham** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

>>>>END<<<<